போட்டால் எல்லா மார்க்குகளையும் கொண்டு வந்து பார்க்கும் பொழுது ஒரு குறிப்பிட்ட குழுவிலே இருப்பவர்கள் அதிகமாகி யும், வேறு ஒரு குழுவிலே இருப்பவர்கள் பின் தங்கிய நிலையி லேயும் இருப்பார்கள் என்பதால் அந்தந்தக் கல்லூரிகளிலேயே குழுக்களை ஏற்படுத்தியது. அந்த மாணவர்கள் எந்தக் கல்லூரிக்கு வேண்டுமானாலும் விண்ணப்பம் செய்யலாம், ஆனால் 2, 3 கல்லூரி களுக்கு விண்ணப்பம் செய்தால், அவர்கள் முகவரிக்கு அண்மை யில் இருக்கும் கல்லூரிக்கு விண்ணப்பம் அனுப்பி வைக்கப்படு கிறது. எந்தக் கல்லூரிக்கு வேண்டுமானாலும் விண்ணப்பம் அனுப்பலாம். கூடுமான வரையில் அந்த அந்தப் பகுதிகளில் விண்ணப்பம் அனுப்ப வேண்டுமென்று வற்புறுத்தாமல், வேண்டு கோளாக விடுக்கும் அளவில் இந்த ஆண்டு இம் முறையை மேற் கொள்ளப்பட்டிருக்கிறது.

Judges for State Lotteries.

* 7 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state the basis on which judges **for the drawal of the State Lotteries are being nominated?**

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாநில அரசின் பரிசுச் சீட்டுக் குலுக்கலுக்கு நடுவர்களை நியமிப்பதற்காக எந்தவிதமான நிபந்தனைகளும் வரையறுக்கப்படவில்லை. மாநில மத்திய அரசுகளைச் சேர்ந்தவர்களும் பொது மக்களிடையே அதிக அளவு நம்பிக்கையூட்டக் கூடியவர்களுமான உயர்நிலை அதிகாரிகள், பாங்கர்கள், தொழில் அதிபர்கள், பொது வாழ்வில் ஈடுபட்டுள்ள தனிச் சிறப்பு வாய்ந்தவர்கள் ஆகியோரை அரசு தேர்ந்தெடுத்து, நடுவர்களாக நியமிக்கின்றது. இக்குழு 5 பேர்களுக்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவரவர்களே பொது மக்கள் பிரதிநிதிகளை அதிக அளவில் சேர்த்துக்கொள்ள இனியா வது முயற்சி செய்யப்படுமா? இந்தப் பரிசுச் சீட்டு விற்பனை முன்பைவிட தற்பொழுது வெகுவாகக் குறைந்திருக்கிறது என்பது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? எனவே, அரசு இதை மறு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினா வர்கள் இரண்டு கேள்விகளை ஒரே நேரத்தில் கேட்டிருக்கிறார்கள். இந்தக் குழுவிலே இருப்பவர்களைப்பற்றி எந்தவிதமான புகாரும் இல்லை. இக் குழு மிகவும் நன்றாக நடந்துகொண்டிருக்கிறது. பொதுமக்கள் பிரதிநிதிகளும் சேர்க்கப்படுகிறார்கள். மேலும் சேர்க்க முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படலாம். ஆனால், பொது வாக பரிசுத் திட்டம் நல்ல வகையிலே நடந்து வருகிறது என்பது தான் அரசாங்கம் கண்டு பிடித்திருக்கும் ஒரு நிலையாகும். இது வரையில் மொத்தம் 16 கோடியே 92 இலட்சத்து, 28 ஆயிரத்து

1970 ஆகஸ்ட் 25]

717 ரூபாய் அளவுக்கு டிக்கெட்டுகள் மொத்தமாக விற்றிருக்கின்றன. நான் சொல்லும் கணக்கு மே மாதம் முடிய இருக்கிற கணக்காகும். இன்றைக்குக் கூட ஒரு குலுக்கல் நடைபெறுகிறது. இது வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது என்பது அரசாங்கத்தில் சொல்கிற நிலைமை.

திரு. எம். சுரேந்திரன் : தலைவரவர்களே, பரிசுச் சீட்டு முறை நிரந்தரமாகிவிட்டதால், அதற்கான நடுவர்களைத் தேர்ந்தெடுக்க அவ்வப்பொழுது தீர்மானிப்பதைவிட ஒரு நிலையான ஏற்பாடாக, இன்னின்னார்தான் தேர்ந்தெடுக்கப்படலாம் என்று விதி வகுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தேவையற்ற ஒன்றாகும். பாரபட்சமற்ற தன்மையிலே, எதுவும் தவறுகளோ கோளாறுகளோ நடைபெறாமல் இருப்பதற்காக நடுவர்கள் இருக்கிறார்கள். இன்றிருக்கும் முறைதான் பொருத்தமானது.

திரு. ஆர். கருப்பையா : தலைவரவர்களே, இப்பொழுது உள்ள பரிசுச் சீட்டு முறையிலே நம்பர் மட்டும்தான் இருக்கிறது. நம்பர் தெரியாதவர்கள், கிராமத்தில் ஏமாற்றப்படுகிறார்கள். எனவே இந்த முறையை மாற்றி பரிசுச் சீட்டில் வாங்குபவர்களின் பெயரைக் குறிப்பிட்டால், பரிசு விழுந்தால் பெயரைக்கொண்டு கண்டுபிடித்து விடலாம் என்ற முறையில் அந்தத் திட்டத்தைப் பரிசிலிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பெயரைப் பார்க்கவும் தெரியாதவர்களாக இருக்கலாம். பொதுவாக, எந்த விஷயத்திலும் ஏமாளிகளாக இருக்கக் கூடாது என்பது உலக நியதி.

திரு. பெ. மலைச்சாமி : தலைவரவர்களே, பரிசுச் சீட்டுக் குலுக்கல் சென்னையில் மட்டும்தான் நடைபெற்று வருகிறது. எனவே, இந்தக் குலுக்கலை ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரத்திலும் நடத்தி, அதற்காக சற்று விளம்பரங்களை அதிகப்படுத்தினால் இன்னும் பரிசுச் சீட்டு விற்பனை அதிகமாகும். இதை அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : குலுக்கல் சென்னையிலே நடைபெறவேண்டியிருக்கிறது. இங்கேதான் நல்லமைச் செயலகம் இருக்கிறது. இன்றுகூட, 25-ம் தேதி, 23-வது குலுக்கல் நடைபெறப் போகிறது. பரிசு வாங்குபவர்களுக்கான விழாக்கள் பல்வேறு மாவட்டத் தலைநகரங்களில், செங்கற்பட்டு, திருச்சிராப்பள்ளியிலே நடைபெற்றிருக்கின்றன. அம்மாதிரி நிலைமைகளை மேற்கொள்வதால், குலுக்கலை வேறு இடத்திற்குக் கொண்டு போகவேண்டிய அவசியமில்லை.

திரு. கே. போஜன் : தலைவரவர்களே, அமைச்சரவர்களின் பதிலிலே மே மாதம் வரை பரிசுச் சீட்டு விற்பனையிலே 16 கோடி அளவிற்குக் கிடைத்ததாகச் சொன்னார்கள். பரிசுத் தொகை போக, அரசாங்கத்திற்கு ஏற்பட்ட செலவுகள் போக, அரசாங்கத்திற்கு மிகுதியாகக் கிடைத்திருக்கும் வருமானம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அரசாங்கத்திற்கு இதன் மூலமாகக் கிடைத்திருக்கும் வருமானம் 9 கோடியே 75 இலட்சத்து 40 ஆயிரத்து 135 ரூபாய் ஆகும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : பரிசுச் சீட்டில் இருந்து மொத்தமாகக் கிடைத்திருக்கும் வருவாயை மாவட்ட அளவில் அபிவிருத்தி வேலைகளுக்காகப் பகிர்ந்து செலவழிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாவட்ட அளவில் என்று செலவு செய்யும் நிலை அல்ல. இதைச் சிறப்பு நிதியாக அரசாங்கக் கணக்குகளில் இருந்து தனிமைப்படுத்தி, குறிப்பிட்ட அபிவிருத்தி வேலைகளுக்கும், பள்ளிக்கூடங்கள், ஆஸ்பத்திரிகள் கட்டுவதற்கும், அரிசன மாணவர்களுக்காக உபயோகப்படுத்துவதற்கும் தனிக் கணக்காக வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். நாகசுந்தரம் : எல்லா மாநிலங்களிலும் பரிசுச் சீட்டுகள் வெளியிட்டாலும் கூட வேறு மாநில அதிகாரிகள் நம்முடைய ஏற்பாட்டைப் பரிசீலித்து, இது நல்ல விதமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்று கூறியிருப்பதை அந்தப் பக்கத்தில் உள்ளவர்கள் அறிவார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : எந்தப் பக்கம் என்று தெரியவில்லை. பொதுவாகத் தமிழ் நாடு அரசாங்கம் இப்படிப்பட்ட பாராட்டுக்குரிய பல சாதனைகளைக் கடந்த மூன்றரை ஆண்டுக் காலமாகச் செய்து வருகிறது என்பதை எல்லாப் பக்கத்தினரும் நன்கு உணர்ந்து வருகிறார்கள்.

SECOND PAY COMMISSION.

*8. *Q.*—THIRU K. CHEEMAICHAMY : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Second Pay Commission appointed for the revision of pay scales of the Government servants has submitted its recommendations to the Government?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இல்லை.

DR. H. V. HANDE : Sir, a number of recommendations have been made by the First Pay Commission and many of them have not yet been implemented. In view of the fact that most of the recommendations of the First Pay Commission have been accepted by the previous Government—even the present Government have